RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt22s321

OPEN ACCESS

# சாதிக் காலனியாதிக்கப் புதைகுழியில் சிதைந்து கிடக்கும் பூக்குழி நாவல்

க. செல்வம் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம்-638108, தமிழ்நாடு, இந்தியா

# Decayed Status of Caste Colonialism Sinkhole in the Novel ‘Pookkzhi’

K. Selvam [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Kangeyam-638108, Tamil Nadu, India

* Corresponding Author: selvam3mtp@gmail.com

Received: 06-04-2021
Revised: 28-04-2022
Accepted: 05-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

This research paper on the phenomenon of 'Pookkukhi' is a symbol of the manner in which the violent operational politics of caste ideologies, which have become archetypes in the collective consciousness of the Indian social mind, are manifested through fabrications and the manner in which they operate in the social space. In this way, the study seeks to identify with the colonial dominance of caste that can govern the creator's creative mind. The creation of an author who is influenced by caste colonialism describes a philosophy of creation that does not seek to achieve decolonization. In the social set up, the novel sheds light on the dynamics of caste, which plays an important role, and the rejection of inter-caste marriages and the arrogance of caste slave bodies who dare to do anything to preserve their own caste. In accordance with the temporal and spatial contexts, casteism symbolises the sluggishness in the urban areas and the vitality in the rural areas. In such a caste-based society, the conceptualisation of woman as woman against woman (female characters Sirayi, Velayi) structured throughout the work is indicative of the space for woman in social dialectics. Sexual transgressions reflect the common sense of a patriarchal society where a woman's body is identified as a male object, portrayed as a sexual commodity, and denied her rights. It seeks to identify the multiplicity of colonial power that governs the creator's consciousness by examining the issues of society manifested in the work, caste-colonial dominance, the genocidal social disintegration resulting from slavery, and the triadic colonial power manifestations that question the existence of women. The study is based on the approaches of postcolonial analysis and interpretive analysis.

**Keywords:** Pookkukhi, Caste Ideologies, Caste Colonialism, Slave

## முன்னுரை

காலஓட்டத்தில் இலக்கியங்கள் புற்றீசல்கள் போல் ஊற்றெடுக்கின்றன. இவை ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் நிலவும் வாழ்வியல் சிக்கல்களை மையப்படுத்துகின்றன. யதார்த்த வயமான சமூகச் சூழலைப் படைப்பாளி புனைவிற்குள் கடத்தும் போதும் புனைவின் கருவானது சமூக வெளியில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பொருத்து அவை ஒவ்வொன்றும் இச்சமூக ஊடாடலில் தன் இருப்பை நிலைநிறுத்துகின்றது. சமூகம் சார்ந்த கருத்துக்களும் படைப்பாளியின் அகமனம் சார்ந்தப் புரிதல்களும் புனைவிற்குள் ஆளுமை செய்கின்றன. இச்சூழலில் படைப்பு வேறு படைப்பபாளி வேறு எனப் பிரித்தறிதல் இயலாதபோதுஇ படைப்பினூடாகப் படைப்பாளியின் நனவிலி சார்ந்த புரிதல்களை புனைவின்வழிக் கண்டடையலாம். அந்தவகையில், விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைப் பேசுகிற பெருமாள் முருகனின் ‘பூக்குழி’ என்ற பிரதி வழியாகஇ படைப்பாளரின் நனவிலியை ஆளுகை

செய்யக்கூடிய காலனிய அடிமைப்புத்தியைக் கண்டறிய முடியும் (Perumal Murugan, 2013). பனுவல் பேசுபொருளாகக் கொண்டிருக்கக்கூடிய கதைக்களத்தில் கிடைக்கக்கூடிய தரவுகளின் அடிப்படையில்,

1. சமூகக் கட்டமைப்பும் காலனிய ஆதிக்கமும்
2. மும்மைக் காலனிய ஆதிக்கமும் பெண் இருப்பும்

ஆகிய முதன்மைப் பகுப்புகளுக்கு உட்பட்டு, ஆய்வுக்கு உட்படுத்துவதன் வாயிலாக இக்கட்டுரை படைப்பாளரின் நனவிலியை அடையாளங்கான முற்படுகிறது.

## சமூகக் கட்டமைப்பும் காலனிய ஆதிக்கமும்

சாதியம் என்பது சமூகப் பண்பாட்டு அமைப்பு என்கிறார் தி.கு. இரவிச்சந்திரன். சாதியம் மற்றும் சமூகம் இரண்டில் ஒன்றை விடுத்து மற்றொன்றை காண்பதறிது. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப்பினைந்தவை. "சாதி உருவாக்கத்துக்கு மனுதர்ம பிராமணியக் கோட்பாட்டை ஒரு முக்கியக் காரணியாகக் குறிப்பிட்டாலும் அடிப்படையில் பொருளாதாரமே ஒரு முக்கியக் காரணியாக வரலாறு காட்டும். நிலவுடைமை ஒருவரின் சமூக நிலைப்பாட்டையும் அதிகாரத்தையும் நிர்ணயித்தது" (Noboru Karashima, 2019). சாதியம் சமூகச் சூழலுக்கு ஏற்ப தன்னிருப்பை தகவமைத்துக்கொண்டு மனித சமூகத்தில் நனவிலி மனதில் இருந்து நனவு மனதிற்கு பல கட்டுப்பாடுகளையும் மீறி ஆதிக்கம் செய்கின்றன. இலக்கிய உலகில் சாதியத்தின் தாக்கத்தை பரவலாக கண்டடையலாம். அதிகாரத்துவத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவும் கிளர்ச்சி செய்யவும் கலகமூட்டவும் தனக்கான உரிமைகளை முன்மொழியவும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் வாழ்வியல் சிக்கல்களை அடையாளப்படுத்தி பேசுபொருளாக்குபவையாக இத்தகைய புனைவுகள் அமைகின்றன. "பிரதிகள் ஆசிரியன் மனத்தின் நேரடி வெளிப்பாடுகள்" என அமைப்பியமும் பின்அமைப்பியமும் என்னும் நூலில் குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கது (Poornachandran, 2009). புனைவு வெளியில் படைப்பாளியையும் மீறி அதிகாரத்துவம் சார்ந்த பதிவுகளை படைப்புகளை ஆய்ந்தறியும்போது உணர்ந்துகொள்ளலாம். ஆட்டூருக்கு செல்லும் சரோஜா மற்றும் குமரேசன் எதிர்கொள்ளும் ஒரே சிக்கல் அவள் என்ன சாதி என்பதே "நம்ம எனத்து மூஞ்சியில்ல மாப்ள இது… எப்படியோ பொழங்கற இனந்தானா?" அந்தூரு பக்கமெல்லாம் நம்ம எனம்சனம் இருக்காதெ" "எனம் என்னன்னு நாலு பேருக்குத் தெரியச் சொல்லீரு" ஒட்டுமொத்த சமூகத்தின் கேள்வியாக அமைகிறது (Perumal Murugan, 2013). "ஒருவர் சாதிப் பெயரைக் கேட்டவுடன் அது தொடர்பான தொழில் அழுக்கு தீட்டு சமூகத் தகுதிநிலை வரலாறு மரபு எல்லாம் மனக்கண்முன் நிழலாட வந்துவிடுகின்றன (Perumal Murugan, 2013). பிறகு அவற்றுக்கேற்ப மனம் இயங்கத் தொடங்குகிறது" கிராமியச் சமூகம் இன்றளவும் சாதிய உயிர்ப்புடன் இயங்குவற்கு இதுவே காரணமாக அமைகிறது (Ravichandran, 2014). சரோஜாவின் நிறம் "பாரென் இந்தக் கருவாயனுக்கு வந்த வாழ்வன்னு அவனவன் கருவிக்கிட்டுக் கெடப்பான்" எனக் குமரேசனின் மனவெளியில் தற்பெருமையாக அமைய நிறமும் பிரச்சனைக்குறியதாக்கப்பட்டு "செவப்புத் தோலப் பார்த்து பிதுமாறு கெட்டுப் போயிட்டடா பயா" என நிறத்தின் அடிப்படையிலும் ஒடுக்கப்படுவதைக் காணமுடிகிறது (Perumal Murugan, 2013). வேற்று சமூகம் சார்ந்தப் பெண்களை திருமணம் செய்யக்கூடாது என்னும் முன்னெச்சரிக்கை உணர்வை ஏற்படுத்தும் வகையில் "அப்பிடிக் கலியாணம் பண்ணிக்கிட்டன்னு தெரிஞ்சா ஊருப் பக்கம் போவமுடியாது. எனம் சனத்த உட்டு இங்கயே கெடக்க வேண்டியதுதான். போனமுன்னா வெசம் வெச்சுக் கொன்னு புடுவாங்க. இல்லீனா அடிச்சுத் தூக்கிக் கட்டீருவாங்க" எனப் பெரியசாமி கதாப்பாத்திரத்தின் மூலம் சுட்டும் படைப்பாளி அதற்கான தண்டனைகளையும் கட்டமைக்கிறார் (Perumal Murugan, 2013). "சாதி என்பது சமுதாயத்தின் ஒரு பிரிவினர் ஒரு குழுமமாக அமைந்து பிற குழுவினருடன் எவ்வகையிலும் தொடர்பு கொள்ளாமலும் கலப்பு மணவுறவு ஏற்படுத்திக் கொள்ளாமல் தங்கள் குழுவினரைத் தனிமைபடுத்திக் கொள்ளுதல்" (Ambedkar, 2017) இத்தனைய தனிமைபடுத்துதலை "தண்ணிய நாம தூக்கி ஊத்துனாக் குடிக்கறவங்களோட ஒன்னா மன்னா தொட்டுப் பொழங்க உடறியே" சம்பா உங்க தொந்தரவு இல்லாத தண்ணி சேந்திகிட்டுப் போலாமின்னு மட்ட மத்தியானத்துல வந்தாலும் வந்து நின்னுக்கறீங்க" எனச் சுட்டும் படைப்பாளி சாதியம் சார்ந்த கட்டுப்பாடுகளையும் அதன் வழி சாதிய அந்நியப்படுத்தப்படுதலையும்

காட்சிபடுத்துகிறார் (Perumal Murugan, 2013). "சாதி என்பது கட்டுப்பாட்டு விதிமுறைகள் கொண்ட ஒழுங்கமைவு குறிப்பாக திருமணம் உணவு குடிநீர் முதலியவற்றை கட்டுப்படுத்துகின்றன" என்று தத் கூறும் கருத்தோடு விளக்கிக்கொண்டு இத்தகையப் பிடிமானங்களில் இருந்தே அம்மக்களின் சிந்தனை மற்றும் செயல்பாடுகள் ஆக்கம் கொள்வதை அறியமுடிகிறது (Ravichandran, 2014). இவர்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையாக கடவுள் வழிபாட்டுமுறை அமைந்துள்ளது. இதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வுகளை கட்டுப்பாடு என்ற பெயரில் தடை செய்வதோடு ஊர்க்கட்டுக்கோப்பை "எனம் சனமில்லாத பிள்ளய ஊருக்குள்ள வெச்சிருக்கறான் அது ஊருக்கே தீட்டு. தீட்ட வெச்சுக்கிட்டு நோம்பி சாட்டுறது சாமி கோபம் ஊர என்ன செய்யுமோ தெரியில" உருவாக்குவதோடு "அக்னிச் சட்டி எடுத்துக் கும்படற சாமி நம்ம சாமி (Perumal Murugan, 2013). அவளுக்கு வேத்து எனமுன்னா ஆவுமா? வேற எனத்துப் பிள்ள ஊர்ல இருக்கற தீட்டக் கழிக்காத நோம்பி போடக்கூடாது" எனக் கடவுளை முன்னிருத்தி நிகழ்த்தப்படும் இந்தக் கட்டுப்பாடுகளுக்கு நனவிலி மனதின் தீண்டாமை அச்சமே காரணம் (Perumal Murugan, 2013). இங்கு தூய்மோன் கூறும் தூய்மை-தீட்டு என்னும் இருநிலை எதிர்மையின் தாக்கத்தைக் காணலாம். "உட்டா ஊர்ல நாளைக்கி ஒவ்வொருத்தனும் எந்த எனத்துப் பிள்ளய வேண்ணாலும் இழுத்துக்கிட்டு வந்து ஊர்ல வெச்சுக்குவான்" என்ற கருத்துருவானது வேற்று சமூகத் திருமணங்களைத் தடுக்கவும் இனத்தூய்மை மற்றும் சுயசாதியத் தரம் குலையாமல் காக்க மேற்கொள்ளப்படும் உத்திகளாகும் (Perumal Murugan, 2013). "இந்து மதத்தில் ஒருவனின் தரத்தைச் சுட்டுவதாக சாதி விளங்குகிறது. இதற்குள் அகமணமும் தொழிலும் இயைபாகின்றன என்கிறார் கெள" (Ravichandran, 2014). ஊர்க்கூட்டம் போட்டு சீராயி-இன் குடும்பத்தை சமூக ஒதுக்கம் செய்ய முற்படுவதை "பிள்ள என்ன எனமுன்னு தெளிவாத் தெரியிற வரைக்கும் உங்குடும்பத்த ஊர உட்டு ஒதுக்கி வெச்சிருக்கறம். பொழங்கற எனமா இருந்தா அதுக்கேத்த மாதிரி எதுனாப் பரிகாரம் பண்ணிக்கலாம். தீண்டாதாரா இருந்தா காலத்துக்கும் கட்டுப்பாடுதான்" சித்திரிப்பதோடு அனுலோமா (உயர்சாதி ஆண் - தழ்ந்த சாதிப் பெண்) திருமண முறையை படைப்பின்வழி எதிர்பதை ஆழ்மனதில் பிராமணியமயமாக்கலில் படைப்பாளி சிக்குண்டு தவிக்கும் நிலையினை உணர முடிகிறது (Perumal Murugan, 2013). பொதுவெளியில் அவமானத்தையும் வன்முறைகளையும் கட்டவிழ்த்து "கையில துணியேந்திக்கிட்டு நிக்கற சனமும் வருது அப்படி நெனச்சிக்குறன்" "ஊரே தள்ளி வெச்சவன் இங்க வந்துட்டான் ஜோடி போட்டுகிட்டு "நேர்ல பாத்தா வெட்டி பலி போட்ருவானுங்க" என வாழ்க்கையை விரக்தியடையச் செய்து அந்நியப்படுத்தப்படுகின்றனர் (Perumal Murugan, 2013). இதற்கு முக்கியக் காரணம் சாதித்தூய்மையே. இதனை "நாளைக்கு ஒரு விசேசம்னா நாலு எடத்துக்கு கூட்டிகிட்டுப்போவ. ஒன்னுமின்னாப் பொழங்குவ" என்று குறிப்பிடுவதோடு இவர்களை சமூகத்தில் இணைத்துக்கொண்டால் நாளடைவில் சாதியத்தூய்மைக் கெட்டு பிறப்பு வழியாக இருக்கின்ற பெருமை அதிகாரம் மற்றும் சாதியக் கர்வம் சீர்குலைந்துவிடும். "சமூகத்தில் தாம் உயர்ந்த சாதி என்பதைக் காட்டிக் கொள்ள வேண்டித் தீண்டாமை அனைத்துச் சாதிகளாலும் கடைபிடிக்கப்படுகிறது. ஒருவரிடம் தீண்டாமை காட்டுவதால் அவர் கர்வப்பட்டுக் கொள்வார் (Perumal Murugan, 2013). இது சமூகக் கர்வமாகும் " சரோஜா எந்த சமூகத்தைச் சார்ந்தவள் என்பதைத் தெரிந்து கொண்டப்பின் "போனதுதான் போனான். பொழங்கற நாயாப் பாத்திருந்தா எப்பிடியோ போயித் தொலையறான்னு உட்டிருக்கலாம் (Ravichandran, 2014). இது மானக்கேடால்ல போயிருச்சி" எனக்கூறி சரோஜா இனி உயிரோடு இருக்கக்கூடாது என்று சீராயி முதல் அனைவரும் முடிவெடுத்து அவளை ஆணவக்கொலை செய்வதை "கொடுங்குளிரின் பிடியிளிருந்து விடுவிக்கும் பெருநெருப்பு உடலை ஆரத் தழுவ வருகிறது. அதைக் கைநீட்டி வரவேற்கத் தயாரானாள்" எனக் காட்சிபடுத்துவதோடு "எல்லாம் முடிஞ்சாத்தான் இன்னைக்கி கோயில் பூச பண்ண முடியும்" என்னும் படைப்பாக்கமானது "புனிதம் - தீட்டு - தூய்மை சுழற் படிமுறையில் 'இழந்த புனிதத்தை' பெறும் வண்ணம்" பிராமணிய மனநிலைக்கு ஆட்பட்டதின் விளைவாக அமைகிறது (Ravichandran, 2014).

## மும்மைக் காலனிய ஆதிக்கமும் பெண் இருப்பும்

வரலாறு நெடுகிலும் பெண்கள் உரிமைகளைப் பெறப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கால இடச் சூழலுக்கு ஏற்ப பெண்களின் மீதான அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் பல்வேறு

வடிவங்களில் மாற்றுருவாக்கம் செய்யப்படுகின்றன. “ஆணைச்சாந்து பெண் வாழும் நிலை மாறி அவளுக்குத் தனிமனித உரிமைகளும் சுதந்திரமும் தேவை” பெண்கள் தங்களைப் புதுப்பித்துக்கொள்ள உரிமைகளைப்பெற இரட்டை மற்றும் மும்மைக் காலனியக் கட்டமைப்பை தகர்த்தெரிய பல தளங்களில் எழுச்சியோடு செயல்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய நவ காலனியச்சூழலில் புனைவுகள் வாயிலாகப் பெண்கள் மீதான கருத்துத் திணிப்பும் உடல் சார்ந்த ஆணாதிக்க ஒடுக்குமுறைகளும் தொடர்வதைக் காணலாம் (Muthuchithambaram, 2007). சாதியம் கடந்த திருமணத்தை மோற்கொள்ளும் குமரேசன் தன் மனைவி சரோஜாவோடு சொந்த ஊரான ஆட்டூர் நோக்கிச் செல்கிறான். பேருந்தில் இருந்து இறங்கியது முதல் நிகழும் காட்சிகள் அனைத்தும் சரோஜாவிற்குள் பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. சரோஜாவின் வாழ்வியல் சூழல் சுயம் சார்ந்த எண்ண ஓட்டங்கள் “இதுநாள்வரை பழகியிருந்தவை எல்லாவற்றையம் மாற்றிக்கொள்ளும்படி நேருமோ என்று தோன்றும் போதொல்லாம் அடிவயிற்றில் கனம் கூடுகிறது’ எனச் சிதைவுக்குள்ளாகிறது (Perumal Murugan, 2013). நகரத்தில் இருந்து கிராமத்திற்குள் நகர்ந்த சரோஜாவின் வாழ்வியல் எதிர்பார்ப்பு குமரேசனின் வீட்டைப் பார்த்ததும் “ஓலைவீட்டைப் பார்த்ததும் மனதுக்குள் எதுவோ விட்டுப் போயிற்று” எனத் தகர்ந்தது (Perumal Murugan, 2013). சரோஜா பண்பாடு மற்றும் கலாச்சாரம் சார்ந்து ஒடுக்கப்படுவதை “முக்காடு வேண்டாம் எடுத்துரு. இங்கெல்லாம் முக்காடு போட்டா எழவுக்குப் போறதுன்னு அர்த்தம்” என்பதன் வழி அறிய முடிகிறது. “புகுந்த வீட்டிற்கு வருபவள் பெண். அவள் கீழ்ச் சாதியாக இருக்கக் கூடாது” என்ற எச்சரிக்கை உணர்வோடு சீராயி செயல்படுவதை “வெளியூர்ல போயிருக்கற (Ravichandran, 2014). அது இதுன்னு பலவற்றப் பிள்ளயப் பாத்துக்கீது இழுத்துக்கிட்டு வந்தராத” எனக் கூறுவது அகமனதின் வெளிப்பாடாக அமைவதோடு தன் மருமகளைப் பற்றிய அதீதக் கனவில் வாழ்ந்த சீராயிக்கு பேரிடியாக அமைய “கழுத்து நிறைய நகைகளோடும் மாட்டுவண்டியில் பாத்திரம் பண்டங்களோடும் மருமகள் வந்து இறங்க வேண்டும்” என்ற கனவும் சிதைய ஒப்பாரி வைத்து தன் எதிர்ப்பை பதிவு செய்கிறாள் (Perumal Murugan, 2013). அம்மாவின் எதிர்ப்பானது காலப்போக்கில் கரைந்துவிடும் என சரோஜாவிற்கு ஆறுதல் கூறி மன மாற்றத்திற்காக தன் மாமன் வீட்டிற்கு செல்ல முற்படும் குமரேசனுக்கு “எங்கடா வந்த எச்சக்கல நாயே’ என்று கத்திக்கொண்டு ஓங்கி அறைந்தார்” என அங்கும் எதிர்பே வலுக்கிறது (Perumal Murugan, 2013). இதனால் மனம் உடையும் சரோஜா “அனாதி வெளியில் தான் மட்டும் நிற்பதாக உணர்ந்தால்” மேலும் தான் தவறு செய்துவிட்டோமோ என்னும் மனநிலைக்கு தள்ளப்படுவதை “அப்பனுக்கும் அண்ணனுக்கும் தெரியாமல் இவனோடு வந்தது தப்பு என்று தோன்றியது” “குமரேசனை நம்பி இவ்வளவு தூரம் வந்தது தவறோ என்று யோசனை வந்தது” “அவனை மட்டுமே பார்த்துப் பழகி எல்லாவற்றையும் முடிவு செய்திருக்கக்கூடாது” “யாருமற்ற பெருங்குகைக்குள் வந்து சிக்கிக்கொண்டதான பதற்றம்” எனப் புனைவு நெடுகிலும் உய்த்துணர முடிகிறது (Perumal Murugan, 2013). கிராமப்புறச் சூழலில் வாழும் பெண்கள் ஆணாதிக்க அதிகாரத்துவக் கட்டுப்பாடுகளின் கீழ் ஒடுக்கப்படுவதை “டவுனுக்காரத் தட்டுவாணியாட்டம் முங்கொசுவம் வெச்சிக் கட்டறாங்கன்னு ஊருப் பஞ்சாயத்தெ வெச்சிருவாங்க” என்பதை உணர்த்தும் படைப்பாளி எவ்விதமான நவீனத்துவ பொருட்கள் சார்ந்த வளர்ச்சியும் இல்லாத சூழலில் அம்மக்கள் வாழ்வதை “இத்தினியூண்டு பொட்டிக்குள்ள இருந்துக்கிட்டு மனசன் பேசறானே (Perumal Murugan, 2013). கதையில வராப்பல சுண்டுவிரலுச்சோடு மனசனா இருப்பானோ” என்று ‘சம்பாக்கிழவி’ கதாப்பாத்திரம் மூலம் காட்சிபடுத்துகிறார் (Perumal Murugan, 2013). அடக்குமுறைச் சார்ந்த சூழலைக் கட்டமைக்கும் ஆணாதிக்கச் சமூகம்இ சரோஜாவை சமூக ஒதுக்கம் செய்ய முற்படுவதோடு மட்டுமல்லாமல் பாலியல் சார்ந்த அடக்குமுறைக்கும் உள்ளாக்க முனைவதை “நோண்டி மயங்குன அந்த செந்தோலத் தொட்டுப் பாத்தரலாமின்னு நெனச்சன் (Perumal Murugan, 2013). இப்பிடி ஆயிப்போயிருச்சே நம்ம கண்ணுக்கு மட்டும் படட்டும் தொட்டுப் பாத்தரலாம்” எனக் காட்சிப்படுத்துவதோடு பாலியல் நுகர்வு பொருள்களாக ஆணாதிக்க வர்க்கத்தால் பெண்கள் சிதைக்கப்படுவதை “பண்ணயத்துக்கு வர்ற பொம்பளைய வெள்ளாம காட்டுக்குள்ள கூட்டியோர ஆம்பளைங்க இருக்கற ஊரு இது” எனப் புனைவாக்குகிறார் (Perumal Murugan, 2013). திருமணச் சடங்கு முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் பெண்களுக்கு மட்டுமே ஆண்களுக்கு அல்ல என்பதை “போன எடத்துல எப்படியோ தொடுப்பாயிருச்சி. செரி. தப்பில்ல. தொடுப்ப அங்கயே உட்டுட்டு வந்தர வேண்டியதுதான. அப்பப்பப் போயி நாளுநாளு ஒருவாரமுன்னு டேராப் போட்டுட்டு வந்திருக்கலாமே இங்கொண்ண நம்ம எனம் சனத்துல பாத்து நாலு பேருக்குக் கெவுருதியாக்

கலியாணம் பண்ணிக்கலாமில்ல மாப்ள” என விளக்கும் படைப்பாளியின் (சீராயி மறுமணம் இங்கு புணைவின் வழி மறுக்கப்பட்டு 20 வயதில் இருந்து விதவையாக்கப்படுகிறாள்) ஆணாதிக்க மனப்பான்மையை உய்த்துணர முடிகிறது. இந்நிகழ்வு கணவனை இழந்த மனைவிக்கு மறுமணம் இல்லை ஆனால் பெண் உயிரோடு இருக்கும்போதே ஆண் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம் அல்லது பாலியல் ரீதியாக உறவு வைத்துக் கொள்ளலாம் என்னும் ஆணாதிக்க பொதுப்புத்தியின் வெளிப்பாடாக அமைகிறது (Perumal Murugan, 2013). பெண்களின் உடல்வெளி ஆண்களின் கோரப்பார்வையில் மோகம் சார்ந்த பொருளாகவே உருவகிக் கப்படுவதை வெள்ளையன் கதாப்பாத்திரம் வழி கட்டமைத்து ஆண் மைய சமூகத்தின் அகநிலை உணர்வுகளை காட்சிபடுத்த முனையும் படைப்பாளி பெண்களுக்கான சமூக வெளியையும் வாழ்வியல் சூழல்களையும் ஆண் மைய சமூகமே தீர்மானித்து பாலியல் சார்ந்த ஒடுக்கு முறைகளை கட்டவிழ்த்து ஒருவித அச்சம் கலந்த வாழ்வியல் சிக்கலுக்கு உள்ளாக்கப்படுவதை புனைவு நெடுகிலும் (சரோஜா) கண்டடைய முடிகிறது. பெண் நிலை இருப்பு மற்றும் அவர்களுக்கான வெளி (சுதந்திரம்) ஆணாதிக்கம் சார்ந்த தந்தையதிகார காலனியத்திற்குள் கட்டுண்டு கிடப்பதை புனைவின் வழி அவதானிக்க முடிகிறது.

## முடிவுரை

பாலினம் சாதியம் தந்தையதிகாரம் என்ற மும்மைக் காலனியாதிக்கத்திற்குள் சரோஜா ஒடுக்கப்பட்டிருப்பதை புனைவு உணர்த்துகிறது. பெண்வெளி (சுதந்திரம்) மற்றும் பாதுகாப்பு ஆணாதிக்க சமூகத்தால் கட்டமைக்கப்பட்டு கேள்விக்குட்படுத்தப்படுகிறது. தீட்டு - புனிதம் என்னும் முரண்கள் சமூகத்தில் தொடரும் பிராமணியத் தாக்கத்தின் வெளிப்பாடாக அமைகிறது. அனுலோமாவை ஏற்கும் மனித சமூகம் பிரதிலோமாவை எதிர்பது பிராமணியமாக்களின் நீட்சியாக அமைகிறது. சரோஜாவிற்காக தனித்த மொழியரசியலை கைக்கொள்ளும் படைப்பாளி (கேலியா கீது இன்னம் இன்னா பண்ணுவாங்களோ) அவளது புழங்குவெளி சுருக்கப்பட்டு அப்பா மற்றும் அண்ணனைப் பற்றி அதிகம் போசாமல் பேச இயலாத கதாப்பாத்திரமாகக் (கலகமோ எதிர்ப்போ இல்லாமல்) கட்டமைத்து தவிர்த்துவிடுகிறார். விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைப் பேசும் புனைவாக அடையாளப்படுத்தப்பட்டாலும் தலித்திய கதாபாத்திரங்கள் எவ்வித எதிர்ப்பும் இன்றி பலிகடாவாக்கப்படுவது (சரோஜா) தொடர்கிறது. சாதியம் மறுத்த திருமணங்கள் ஆணவக் கொலைக்கு உள்ளாக்கப்படுவதை உணர்த்தும் படைப்பாளி அதிகாரத்துவ சமூகத்தின் சாதிய ஆணவத்தை புனைவில் கட்டமைக்கிறார். சுhதிய ஏற்றத்தாழ்வுகள் புனிதம் - தீட்டு தொடர்பான கற்பிதங்கள் படைப்பாளியின் காலனிய அடிமை புத்தியின் (பிராமணியமயமாக்களின்) ஆழ்மனது வெளிப்பாடாக அமைகிறது.

## References

Ambedkar, (2017) Indiyaavil Saathikal, Ethir Veeliyeedum, Pollachi, India.

Muthuchithambaram, S., (2007) Penniyam thotramum valarchiyum, Paari Nilayam, Chennai, India.

Noboru Karashima, (2019) Thamizhakathil Sathi Uruvakamum Samuga Matamum, New Century Book House, Chennai, India.

Perumal Murugan, (2016) Pookuzhi Kalachuvadu Publication, Nagercoil, India.

Poornachandran, K., (2009) Amaippiyamum Pinamaippiyamum, Adaiyalam Publications, Chennai, India.

Ravichandran, T, K., (2014) Theendamai Saathiya Vulapaguppaivu, Alaikal veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License